சிவராமஜெயம்.

திருடுபிடிக்கும் சாஸ்திரமென்னும்

களவுநூல்சாஸ்திரம்

இஃது,

சிறுமணவூர்,

முனிசாமிமுதலியா

ரவர்களால் இயற்றப்பட்டு,

தமது

சென்னை சூளை,

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1905.

எமதுஅச்சுக்கூடத்தில் விற்பனைக்குத்தயாராயிருக்கும்

புத்தக விளம்பரம்.

இராமாயணம் கிளேஸ் 2-வாலியம் ஒஸ்திபதிப்பு	4	0	0
சாதாரண பாரதம் 4-வாலியம்	4	0	0
இந்துலா [அச்சிலிருக்கிறது]	4	0	0
சோதிடசிகாமணி ஒஸ்திபதிப்பு	3	8	0
இங்கிலீஷ், தமிழ் வைத்தியசிகாமணி ஒஸ்திபதிப்பு	3	0	0
இந்தியன் பினல்கோட் ராயல் ஒஸ்திபதிப்பு	3	0	0
கிராம முனிசிப்கோர்ட் ராயல் கிளேஸ்	3	0	0
கிரிமினல்கோர்ட் சட்டம் [அச்சிலிருக்கிறது]	2	0	0
பிரபஞ்சவுற்பத்தி ஒஸ்திபதிப்பு	2	0	0
சாதாரண இராமாயணம்	I	8	0
உலகவிசித்திரக்கதை ஒஸ்திபதிப்பு	1	0	0
விக்கிரமாதித்தன் கதை கிளேஸ்	1	0	0
பதிவிரதைகள் சரித்திரம்	0	12	0
விராடபர்வம் ராயல் 8-பேஜ் லெத்தோபடத்துடன்	0	12	0
பட்டணத்தார்புராணம் ராயல் 16-பேஜ் லெத்தோப_	0	12	0
பார்வதிபரணியமென்னும் விஷவைத்தியசிந்தாமணி	0	12	0
நஷ்டஜாதகம் கிளேஸ்	0	8	0
நவகண்ட ஆருடம் கிளேஸ்	0	8	0
மூலிகைமர்மம் கிளேஸ்	0	8	0
திருத்தணிகைச் சன்னதிமுறை திக்கு	0	8	0
சரீரசாஸ்திரம் கிளேஸ்	0	8	0
சிவவாக்கியம் 1000-ம்பாடல்கள் கிளேஸ்	0	8	0
மனமோகனக்கண்ணாடி கிளேஸ்	0	8	0
ஜெகத்ரக்ஷா கிளேஸ்	0	8	0
புலவுநூல் இந்தியா சமையல்சாஸ்திரம் கிளேஸ்	0	8	0
கண்கட்டுவித்தை	0	6	0
ஷை 2-ம் பாகம்	0	6	0
சகாதேவர் சோதிடநா	0	6	0
திருநேத்திரசிந்தாமணி	0	5	0
பெண்கள் ருதுஜெனனஜாதகம்	0	4	0
சர்வபிரயாண சகுனசாஸ்திரம்	0	4	0
அகடவிகட சம்சாரி	0	4	0
வாந்திபேதி நிவாரண	0	2	0
எருக்குபஞ்சபட்சி	0	2	0
சைவானுஷ்டானவிதி	0	2	0
அவிவேகபூரணகுருகதை	0	1	6
விபூதி ருத்திராட்ச மகத்துவம்	0	1	3

இப்படிக்கு,

திருமணவூர்-முனிசாமிமுதலியார்,

நெ. 12. சட்டண்ணநாய்க்கன் வீதி,

தூளை போஸ்டு, மதராஸ்.

உ

சிவராமஜெயம்.

திருடுபிடிக்குஞ் சாஸ்திரமென்னும்

களவுநூல் சாஸ்திரம்.

திருமால்துதி.

களவுநூல்தன்னைக் கருத்துடனோத
அளவிலானாரண னடியிணைகாப்பே.

நூல் வரலாறு.

அளவில்லாதுலகேழும் நிறைந்துநின்ற
ஆதிபராபரத்தினுட அருளைவேண்டி
களவானபொருளிருக்குந் திசையைமற்றைக்
கண்டெடுத்தோர்நிறங்குரியு மாணும்பெண்ணும்
உளவரியுங்கைநூலை வெளியாய்ச்சொன்னேன்
உதாசினமாய்ப்பேசாதே மடையமைந்தா
வளமானபுத்தியுனக் கிருந்தாற்கேளு
வள்ளாட்டால்குக்கலைப்போல் வாயைமூடே. 1

நாயிற்றுக்கிழமை களவுபோன பொருளுக்குப் பலன்,

மூடென்றால்வாய்மூடி மனத்தாற்கேளு
முதலானகிழமையடா ஆதிவாரம்
ஆடுகின்றவெப்பொருள்தான் காணாவிட்டால்
அப்பனேயெடுத்தவர்க ளாணேயாகும்
தேடியேபலரையும்நீ தூஷிக்காதே
திருடினவன்பரந்தமுகங் கருப்பனாகும்
வாடையிலேதெற்குதிசை போயிருக்கு
மவன்முகத்தில்தழும்பிருக்கு மறிந்துகொள்ளே.

விபரம்.

நாயிற்றுக்கிழமைதினம் களவுபோனது எந்தப்பொருளாயிருந்தபோதிலும் எடுத்தவர்கள் ஆண்பிள்ளை நிறத்தில்கருப்பன் பரந்தமுகமாயிருப்பான் முகத்தில் தழும்பிருக்கும் தெற்குதிசைகொண்டுபோயிருப்பான். 2

அறிந்துக்கொள்ளவும்—இந்தநூல் இதுவரையிலும் ஏட்டுப்பிரதியில் இருந்தமையால் மறைப்பாக வைத்துக்கொண்டு வெகுபேர் ஜீவனஞ்செய்துவந்தார்கள்.

அறிந்திடுவாய்திங்களென்ற கிழமைதன்னில்
அகத்துடையபொருளதுதான் காணவிட்டால்
பிரிந்தபொருள்பெண்ணெடுத்து மறைத்தாளப்பா
பெரும்பாடியாயிருப்பாள் காதுநீட்டம்
சுருண்டமயிருமிருக்கும் கூந்தலப்பா
சொல்லுவளோவலங்கார மாகச்சொல்வாள்
தெரிந்துகொள்உள்வீட்டு மனிதராகும்
திருடினதுமுயரத்தி லிருக்கும்பாரே.
உயரமென்றுலாகாய மல்லக்கண்டாய்
ஒடுமுதல்பரணியந்த வலசற்குள்ளே
அயந்தபொருளுன்வீட்டு தென்கிழக்கில்
அகப்பட்டுயிருக்குதடா வறிந்துபாரு
வியர்த்தமாய்ப்போகாது முன்னோர்வாக்கு
வெகுசூட்சபுத்தியுனக் கிருக்கவேணுங்
கயர்போட்டுச்சொல்லுவார் சிலதுநூலோர்
கருவென்றுமையென்றுங் கலங்கிடாதே.

விபரம்.

திங்கட்கிழமையில் களவுபோனபொருளை வஞ்சித்தவர் வீட்டுமனிதர் பெண்ணாய்ப்பிறந்தவள் அவள்கூந்தல் சுருண்டரோமமாயிருக்கும் காதுகொஞ்சம்நீண்டிருக்கும் பெரும்பாடியாயிருப்பாள் கடுநிறங்கருப்பு அவள்பேசுகையில்அழகாயிருக்கும் களவுபோனவஸ்துவீட்டுக்குவுயரவிருக்கும் அதாவது ஓடு அல்லதுபரணிவலசல்முதலான விடங்களிலிருக்கும் அந்தவீட்டுக்குள் தென்கிழக்குமூலையில்தேடவும் இந்தநூல்வைத்துக்கொண்டுதான் அஞ்சனம்போடுகிறேனென்றும் மைபோடுகிறேனென்றும் சிலபேர்பிழைத்தார்கள். 3

செவ்வாய்க்கிழமை களவுபோனபொருளுக்குப் பலன்.

கலங்காதே செவ்வாயிற் களவேபோனல்
கண்டெடுத்தமனிதரவ ராணேயாகும்
பலன்கேளு நடுத்தரமாம் வர்னமுள்ளான்
பாவியவன் முகத்திலொரு தழும்புமுண்டு
விலங்கதுபோல் திரேகமது நீண்டிருக்கும்
விட்டபொருள் கட்டிலிலே யொளித்துவைத்தான்
நலங்காமல் வடமேற்கு யிடத்திற்றுனே
நம்மதென்ற பொருளிருக்கும் நம்பிப்பாரே.

விபரம்.

செவ்வாய்க்கிழமை களவுபோன பொருளை யெடுத்தவன் ஆண்பிள்ளை நடுத்திரமானநிறமுள்ளவன் திரண்டசரீரமுள்ளவன் அவன்முகத்தில்தழும்புண்டு களவுசெய்தபொருளைக்கட்டிலில் ஒளித்துவைத்திருக்கிறன் வடமேற்குஇடத்தில் பார்க்கவும். 4

புதன்கிழமை களவுபோன பொருளுக்குப் பலன்.

பாரப்பாபுதன்கிழமை களவுசெய்தோன்
பார்வைக்குமஞ்சளநிற மாயிருப்பான்
கூறப்பாவழகுள்ள புருடனென்றே
குடிமிவெகுகுறுகலடா வஞ்சாதீரன்
தேரப்பாதன்னகமாம் வீட்டுக்குள்ளே
தென்மேற்குமூலையிலே தேடச்சொல்லு
சீரப்பாஇன்னூலைக் கண்டபேர்கள்
செப்புவார்குறியென்றும் வசியமென்றே.

புதன்கிழமையில்களவுபோனவுடமையை யெடுத்தவன் ஆண்பிள்ளை மஞ்சள்நிறமாயிருப்பான் அதாவது அதிகசிகப்பன் அழகுள்ளபுருஷனுயிருப்பான் குருகின மயிருள்ளவன் தென்மேற்கு மூலையில் தேடவும் கிடைக்கும். 5

வியாழக்கிழமையில் களவுபோன பொருளுக்குப்பலன்.

வசியமென்றகுருவாரங் களவேபோனல்
வஞ்சித்தோனுங்களிட பந்துவாகும்
அசைத்தபொருள்சேதமே யாகாதப்பா
அகப்படவோநாள்செல்லும் அடையாளங்கேள்

தசையென்றமுகமதுதான் பரந்திருக்கும்
தலையிலேநெடுக்கவொரு குழிப்புப்பாரு
விளையானவின்னால மறைவாய்வைத்து
வெகுபேர்கள்பிழைத்தமொழி வெளியிட்டேனே.

விபரம்.

வியாழக்கிழமையில் களவுபோனவுடமையெடுத்தவன் ஆண்பிள்ளை பொருட்காரருடைய பந்துவு அதாவது யினத்தான் பரந்தமுகத்தான் அவன்தலையில் நெடுக்க ஓர் அடையாளமுண்டு அகப்பட நாள்செல்லும். (6)

வெள்ளிக்கிழமையில் களவுபோன பொருளுக்குபலன்.
வெள்ளியிலேசென்றபொருள் உளவைக்கேளு
வாலிபக்காரியடா யெடுத்தமாது
விள்ளவேமஞ்சள்நிற மாயிருப்பாள்
வயற்றிலொருஅடையாள மிருக்கும்பாரு
கள்ளவேபிரத்தியட்ச மானதிட்டில்
கன்னியவள்குந்திருப்பாள் கண்டுகொள்ளு
தெள்ளவேதென்மேற்கு மூலைதன்னில்
தேடவேயின்னாலால் தெரிந்துகொள்ளே.

விபரம்.

வெள்ளிக்கிழமையில் களவுபோனபொருளை யெடுத்தவள் வாலிபக்காரிமஞ்சள்நிறமாயிருப்பாள் அவள்வயிற்றில்ஓர் அடையாளமுண்டு அவள்பிரத்தியட்சமான திட்டமாய் குந்திருப்பாள் தென்மேற்கு மூலையில் சொல்லவும். (7)

சனிக்கிழமையில் களவுபோன பொருளுக்குப்பலன்.
சனிக்கிழமைகளவான பொருளின்மார்க்கம்
சாற்றுகிறேன்குறிகள்முதல் குணத்தைக்கேளு
கனிவானவன்னுடைய பந்துதானே
கன்னெடுத்தான் கொடுக்கநாளதிகமாகும்
வினையாலேகால்கோண லாய்நடப்பான்
வெட்டுபோல்தலையிலொரு குறிப்புமுண்டு
பனைபோலேபெரும்பாடி யாயிருப்பான்
பயந்துதானேகொடுப்பான் பார்த்துகேளே.

விபரம்.

சனிக்கிழமையில் களவுசெய்தவன் சொந்தபந்து பெரும்பாடியாயிருப்பான் கால்கள் கொஞ்சம்கோணலாய் நடப்பான் தலையில் ஓர் அடையாளமுண்டு அகப்பட நாளாகும் ஆனாலும் பயந்துகொடுத்துவிடுவான் கேழ்க்கவும். (8)

வாரபலன்-முற்றிற்று.

சிவராமஜெயம்.

பன்னிரண்டு லக்கினத்திற்குப்பலன்.

விருத்தம்.

பொருள்தனைபரிகொடுத்து மனதுநொந்து
போக்கிடங்கள்தெரியாமல் புத்திமாறி
அறிவாளிஜோசியனே யையாவென்று
ஆவலோடுவுன்னைவந்து கேழ்ப்பாராகில்
பிரியமவர்கேட்குமப்போது மைந்தா
பேசுகிறலக்கினத்தைப் பார்த்துக்கொள்ளு
திரமானமேஷமது நின்றுதானால்
திருடினவன் பிராமணனு மென்றுசொல்லே.

(இ-ள்) எந்தவாரத்தில் களவுபோனாலும் ஜோசியனை வந்து கேழ்க்கும்போது மேஷலக்கினமானால் பிராமணனெடுத்தானென்று சொல்லவும் அல்லது லக்கினம்பார்க்கத் தங்களுக்கே தெரிந்தால் களவுபோய் எத்தனைநாளானபோதிலும் தேடிக்காணாமல் களவுபோச்சுதென்று மனதில் திடப்பட்டபொழுது லக்கினத்தைப்பார்த்து யெந்த லக்கினம் நிற்கிறதோ அதைகொண்டு யின்னாரென்று தெரிந்துக்கொள்ளவும்.

சொல்லையிலேரிஷபமது நின்றுதானால்
க்ஷத்திரியனென்றலவோ பேசவேணும்
வல்லையிலேலக்கினமது மிதுனமானால்
வைசியனால்களவென்று வரையலாமே
தொல்லையிலே கடகமது தோன்றினக்கால்
துலைந்தபொருள் சூத்திரனுமென்றுசொல்லு
பல்லையிலேசிங்கமது நின்றுதானால்
பந்துவிடகைதனிலே பட்டுப்போச்சே.

(இ-ள்) கேழ்க்கும்போது ரிஷபலக்கினமானால் க்ஷத்திரியன் மிதுனலக்கினமானால் வைசியன் கடகலக்கினமானால் சூத்திரன் சிங்கலக்கினமானால் தன்பந்துக்களில் போயிருக்கிறதென்று அறியவும்.

கன்னியென்றலக்கினத்தில் காணுவிட்டால்
களவானபொருள்தனைப் பெண்ணெடுத்தான்
தன்னுடையபெண்சாதி யெடுத்திருந்தால்
தங்குமடாதுலாமென்ற லக்கினம்வந்து
பன்னடாவிருச்சிகமே வந்ததானால்
பரதேசத்தானென்று பகரலாமே
என்சொல்வேன்தனுசென்ற லக்கினமானால்
எங்கையோவைத்தவனே மறந்திட்டானே.

(இ-ள்) கன்னியாலக்கினமானால் ஸ்ரீயெடுத்தாள் துலாலக்கிமானால் தன்பெண்சாதி யெடுத்திருக்கிறாள் விருச்சிகலக்கினமானால் அன்னியதேசத்தானால் போய்விட்டது தனுசுயென்ற லக்கினமானால் கைமறதியாகவைத்து மறந்துவிட்டான்.

மகரமென்றலக்கினத்தில் காணுவிட்டால்
மனையிலேயுள்ளிருந்த தோழரப்பா
திரமான கும்பமதில் காணுவிட்டால்
தாய்வமித்தாரெடுத்து மறைத்தாரப்பா
கரையறிந்தமீனத்தில் காணுவிட்டால்
கண்மணியேஉன்னுடைய பிள்ளையாகும்
விபரமாய்ப்பலரறிய வேணுமென்று
விளம்பினேன்சிறுமணவூர் முனிசாமித்தான்
குறையறைகள்சேர்ந்தாலும் பொருப்பீரென்று
மோடியாய்வந்தனங்கள் கூறினேனே.

களவுபோனஉடமை யிருக்கிறதிற்கு.

மேஷமானால் பர்வதத்தில், ரிஷபமானால் ஊரில், மிதுனமானால் அக்கினிதிசை, கடகமானால் வடக்கே, சிங்கமானால்தெற்கே கன்னியானால் நிருதி, துலாமானால் வீட்டிற்குப்பின், விருச்சிகமானால் மேற்கே, தனுசானால் கிழக்கே, மகரமானால் வாயு, கும்பமானால் ஈசான்யம் மீனமானால் சலத்தில் என்றறியவும்.

மகரலக்கினமானால் உள்ளறிந்த சினேகிதன் கும்பமானால் தாய்வம்சத்தார் எடுத்தார்கள் மீனமானால் தன்னுடைய பிள்ளையே யெடுத்தானென்றறியவும்.

களவு நூல் சாஸ்திரம்
முற்றிற்று.